வந்தார்கள். மறுபடியும் இரண்டு மாதங்களாக 37 ஆயிரம் டன் என்று தருகிறார்கள். நாம் செய்யும் கொள்முதல், அவர்கள் தந்தது, வெளி மாநிலங்களிலிருந்து வாங்குவது ஆகியவற்றை வைத்துக்கொண்டு நாம் சமாளிக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து வாங்க வேண்டுமென்றால், ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வாங்கித்தான் வாங்க வேண்டும். அப்படி ஒரு இலட்சம் டன் ஆந்திராவிலிருந்து வாங்க மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம். அவர்கள் அனுமதி கொடுத்தாலும், நாம் 12½ சதவீத வட்டிக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் வாங்கித்தான் வாங்க வேண்டும். மேலும் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டுமென்று ரிஸ்க் அலவன்சாக 35 ரூபாய் கொடுத்தோம். அதை கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு சொல்லுகிறது. இருந்தாலும் இங்குள்ள நிலைமையைப் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். ரிசர்வ் வங்கி சாதாரண ஆட்களுக்குக் கொடுப்பது போன்று 18 சதவீத வட்டிக்குத்தான் நமக்கும் கடன் கொடுக்கிறது. 18 சதவீத வட்டிக்குக் கடன் வாங்கியாவது நெல் வாங்க வேண்டுமென்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று சொன்னால், எல்லோரும் சேர்ந்து எடுக்க வேண்டிய ஒன்றுதான். அவசியமானபோது மிகைப்பற்று வாங்கித்தான் ஆக வேண்டும். வட்டி செலுத்தினாலும் பரவாயில்லை. நாம் இதுவரை ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் வட்டி மட்டும் செலுத்தியிருக்கிறோம். வட்டி செலுத்தினாலும் கூட, நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்பதற்காக அவர்களிடத்திலே கேட்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

கிராமக் காவலர்கள்

*52 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராம நிர்வாக அலுவலரின்கீழ் பணியாற்றும் பகுதிநேர கிராமக் காவலர்களை, முழுநேர ஊழியர்களாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) கிராமக் காவலர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கும்படி, அவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(இ) அவைபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(உ) ஆம்.

(எ) இக்கோரிக்கை இன்னும் அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

(முற்பகல் 9-40)

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, பகுதி நேரக் கிராமக் காவலர்கள் தமிழ் நாட்டில் எவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 31,506 கிராமக் காவலர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்த கிராம நிர்வாக அலுவலர்களின்கீழ் பணியாற்றும் பகுதி நேர கிராம நிர்வாக அலுவலர்களுடைய மாதாந்திர ஊதியம் என்ன? அப்படிப்பட்ட ஊதியத்தின் காரணமாக அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படுகிறது? அரசு இதை உடனடியாக உயர்த்துகிற நோக்கம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, கிராமக் காவலர்கள் என்பது கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் மற்றும் பாசனக் காவலர்கள் என்று பெயர். அவர்கள் 31,506 பேர் இருக்கிறார்கள். மாதச் சம்பளம் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. மாதச் சம்பளம் ரூ. 140 தான். அந்த 140 ரூபாய் மிகக் குறைவு என்று இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலித்து விரைவிலே அதற்கு வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Incentive Increments for Secretarial Assistants.

*53. *Q*.—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru P. R. Thomas): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that erstwhile Secretarial Assistants are eligible for incentive increments for acquiring M.A. or M.Ed. qualifications; and

(*b*) if so, the reasons for not extending this privilege to the erstwhile bifurcated staff in Agriculture Section ?